வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc
info@wtsc.org.au
www.wtsc.org.au

# பேச்சுப் போட்டி - 2024

## ஆண்டு 6

(போட்டி நடைபெறும் நாள் 01/06/2024)

அனைவருக்கும் வணக்கம்.

## நேர்பட ஒழுகு.

மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் அமைந்தது தான் ஒளவையாரின் ஆத்திசூடி. இதில் வரும் “நேர்பட ஒழுகு” என்ற தலைப்பில் உங்கள் முன் பேச வந்துள்ளேன்.

இதன் பொருள் நேர்மையான வழியில் நடப்பதாகும். நேர்வழி என்றால் என்ன? உண்மை பேசுதல், பிறருக்கு உதவுதல், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், பெரியோரை மதித்தல் என்பன நேர்வழி நடத்தலில் அடங்கும்.

இதனையே திருவள்ளுவர் திருக்குறளில்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”

என்றார்.

நேரிய வழியில் பயணிக்கும் போது பல நன்மைகள் ஏற்படும். பிறரின் அன்பையும் நன்மதிப்பையும் பொறுவோம். நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். வாழ்வில் உயர்ச்சி அடைவோம். அமைதியான மகிழ்ச்சியான வாழ்கை அமையும்.

எனவே நாம் அனைவரும் நேர்பட ஒழுகுவோம்.

நன்றி. வணக்கம்.